# சுவஸ்திகாவிற்கு சார்பாக வெளியிட்ட அறிக்கையை திரும்பப் பெற்றது யாழ். பல்கலை ஆசிரியர் சங்கம்!

## மாணவர் போராட்டத்தையடுத்து முடிவு



யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களின் கதவடைப்புப் போராட்டத்தை அடுத்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம், சட்டத்தரணி சுவஸ்திகாவிற்கு சார்பாக தாம் நேற்று வெளியிட்ட அறிக்கையைத்திரும்பப்பெறுவதாக அறிவித்துள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் வெளியிட்ட அறிக்கைக்கு எதிராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களால் இன்று போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் சட்டத்தரணி சுவஸ்திகாவிற்கு ஆதரவாக வெளியிட்ட அறிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்து, பல்கலைக்கழக மாணவர்கள் பல்கலைக்கழகத்தின் பிரதான நுழைவாயிலை மூடி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகளைச் சந்தித்துக் கலந்துரையாடுவதற்கு மாணவர்களால் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. அதற்குச்சாதகமான பதில் கிடைக்காத நிலையில் மாணவர்களால் பிரதான நுழைவாயில் மூடப்பட்டு போராட்டம் இடம்பெற்றது.

இன்று காலை முதல் பல்கலைக்கழக விஞ்ஞான பீட வளாகத்தில் ஒன்றுகூடிய பல்கலைக்கழக மாணவர்கள் இவ்வாறு போராட்டத்தில் 2 ➤


# மாலைக்கதிர்

Maalaikkathir

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2054 ஐப்பசி 22 வியாழக்கிழமை 09.11.2023 கதிர் 109



யாழ்ப்பாணத்தில் இருந்து ஒரு புதிய வியாபாரக்குறி!

A new brand from Jaffna!

பூ ஆடை

PooAadai

ஆண், பெண் இருபாலாருக்குமான ஆடைகள்


## பாரம்பரிய கடற்றொழில் செய்பவர்களுக்கு பாதிப்பு இல்லாத வகையில் கடலட்டைப் பண்ணைக்கு அனுமதி

### கடற்றொழிலாளர் சங்கத்தின் செயலாளர் கோரிக்கை

கிராஞ்சியில் கடலட்டைப் பண்ணைக்குப் பலரும் விண்ணப்பித்துள்ளனர். ஆகவே, பாரம்பரிய கடற்றொழில் செய்பவர்களுக்குப் பாதிப்பு இல்லாத வகையில் அவர்களுக்கும் கடலட்டைப் பண்ணைகளை அமைக்க அனுமதி வழங்க அமைச்சர் நடவடிக்கை எடுக்க வேண்டும், என கிராஞ்சி ஸ்ரீ முருகன் கடற்றொழிலாளர் சங்கத்தின் செயலாளர் த.மகேந்திரன் கோரிக்கை முன்வைத்துள்ளார்.




யாழ் ஊடக அமையத்தில் இன்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். 2 ➤

## நாடாளுமன்றில் விவாதம் இடம்பெறும் போதே கிரிக்கெட் சங்கப் பணத்தை மீளப் பெற முயற்சி

### அமைச்சர் ரொஷான் ரணசிங்க தெரிவிப்பு

இலங்கை வங்கியின் கிரிக்கெட் சங்கக் கணக்கிலிருந்து 2 மில்லியன் டொலர் பணத்தை ஸ்ரீலங்கா கிரிக்கெட் அதிகாரிகள் மீளப் பெற்றுக்கொள்வதற்கான முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றமை தொடர்பில் தகவல் கிடைத்துள்ளதாக விளையாட்டுத்துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்க தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் ஸ்ரீலங்கா கிரிக்கெட் தொடர்பில் இடம்பெற்று வரும் விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.



சுதந்திர சதுக்கத்திலுள்ள அரச வங்கியிலுள்ள 2 மில்லியன் டொலர் பணத்தையே இவ்வாறு பெற்றுக்கொள்ள முயற்சித்து வருவதாகவும் அமைச்சர் 2 ➤

## அரசியல் தலையீடு இல்லாத கிரிக்கெட் சட்டத்தைக் கொண்டுவந்தால் ஆதரவு

### இரா.சாணக்கியன் எம்.பி. அறிவிப்பு



இலங்கை கிரிக்கெட்டின் செயற்பாடுகளில் அரசியல்வாதிகள் தலையிடவே முடியாதவாறு சட்டங்கள் இயற்றப்படுமானால் அதற்கு ஆதரவளிப்ப தற்குத் தயார், என நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் குறிப்பிட்டுள்ளார்.

நாடாளுமன்றத்தில் இன்று அவர் உரையாற்றியபோது, இலங்கை கிரிக்கெட்டின் நிலைமையும் நாட்டின் நிலைமையும் ஒன்றாகத்தான் இன்று இருக்கின்றன.

விளையாட்டுத்துறை அமைச்சருக்கு இடைக்காலக் குழுவொன்றை தற்போது நியமிக்க முடியுமாக இருந்தால், ஏன் இதற்கு முன்பே இடைக்காலக் குழுவை அமைச்சர் நியமிக்கவில்லை?

அவுஸ்திரேலியா, நியுஸிலாந்து போன்ற நாடுகளில் கிரிக்கெட்டில் அரசியல்வாதிகள் தலையிடவே முடியாது. அப்படியானதொரு சட்டம் கொண்டுவரப்படுமானால், நாமும் நிச்சயமாக ஆதரவு வழங்குவோம்.

தற்போது கொண்டுவரப்பட்டுள்ள இந்தத் தீர்மானத்தினால் எந்தவொரு மாற்றமும் நிகழ்ந்துவிடாது, என நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் மேலும் தெரிவித்துள்ளார். (04)

## நுவரெலியா தபால் நிலைய விற்பனை விவகாரம் ஆயிரக்கணக்கானோர் போராட்டத்தில்!



நுவரெலியா தபால் நிலையத்தை வெளிநாட்டு நிறுவனத்திற்கு விற்பனை செய்யும் நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்து பாரிய போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

நுவரெலிய பிரதான பஸ் நிலையத்திற்கு முன்பாக ஒன்று கூடிய ஆயிரக்கணக்கான போராட்டக்காரர்கள், கோஷங்களை எழுப்பி தமது எதிர்ப்புக்களை வெளியிட்டுள்ளனர்.

நுவரெலியா மற்றும் கண்டி தபால் நிலையங்களை வெளிநாட்டு நிறுவனத்திற்கு விற்பனை செய்ய அரசாங்கம் முயற்சித்து வருவதாகக் கூறப்பட்டது. இதையடுத்து, நாடு தழுவிய ரீதியில் நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் 48 மணிநேர பணிப் பகிஷ்கரிப்பொன்றை 2 ➤

## குடும்ப ஆதிக்கத்தினால்தான் கிரிக்கெட் விளையாட்டு இன்று மோசமான நிலைமைக்குத் தள்ளப்பட்டுள்ளது!

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவிப்பு

குடும்ப ஆதிக்கத்தினால்தான் கிரிக்கெட் விளையாட்டு இன்று மோசமான நிலைமைக்கு தள்ளப்பட்டுள்ளது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ குறிப்பிட்டுள்ளார்.

நாடாளுமன்றில் இன்று உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இலங்கை கிரிக்கெட் சபை அதிகாரிகள் இன்றைய தினத்திற்குள் பதவி விலக வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தல் விடுத்துள்ளார். அதுமட்டுமன்றி, கிரிக்கெட் விளையாட்டின் எதிர்க்காலம் தொடர்பான முறையான வரைவு ஒன்று தேவைப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கைக் கிரிக்கெடிலிருந்து அரசியலை முழுமையாக அப்புறப்படுத்த வேண்டும் எனவும், ஊழல்வாதிகள், போதைப்பொருள் மாபியாக்கள், பாதாள உலக குழுவினரின் தலையீடு இல்லாத கிரிக்கெட்டை உருவாக்க வேண்டும் எனவும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதற்கான நடவடிக்கையை 225 நாடாளுமன்ற 2 ➤


- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -

# பயணிகளுக்கு இடையூறு விளைவித்த 19 யாசகர்கள் காலியில் கைதாகினர்



காலி பஸ் நிலையத்தில் பயணிகளுக்கு இடையூறு ஏற்படும் விதமாக நடந்து கொண்ட 19 யாசகர்கள் காலி நகர சபையின் ஒத்துழைப்புடன் கைது செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவின் பேரில் ரிதியகம புனர்வாழ்வு முகாமுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். இந்த 19 யாசகர்களில் 15 பேர் ஆண்கள் மற்றும் 4 பேர் பெண்கள் ஆவர்.

குறித்த யாசகர்கள் காலி பஸ் நிலையத்தில் யாசகத்தில் ஈடுபட்டு வந்த அதேவேளை இரவு நேரங்களில் பயணிகளுக்கு இடையூறு ஏற்படுத்தியதுடன் பயணிகளின் பயணப்பொதிகள் உள்ளிட்ட பொருட்கள் திருடப்பட்டுள்ளதாக பல சந்தர்ப்பங்களில் முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

அதிகாலை வேளையில் கைது செய்யப்பட்ட இவர்கள் பொலிஸாரால் தடுத்து வைக்கப்பட்டு நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட பின்னர் நகர சபை வாகனத்தில் ரிதிகம புனர்வாழ்வு முகாமுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். (ரெந-17)

## ஜனநாயக இடதுசாரி முன்னணியின் பிரதிநிதிகள் மாநாடு 11 ஆம் திகதி



ஜனநாயக இடதுசாரி முன்னணியின் 9 ஆவது பிரதிநிதி மாநாடு இம்மாதம் 11ஆம் திகதி அக்கட்சியின் பொதுச்செயலாளர் நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தலைமையில் கொழும்பு பொது நூலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இந்த மாநாட்டின் பிரதான எதிர்பார்ப்பு தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் இடம்பெற்று வரும் அரசியல் முன்னேற்றங்கள், எதிர்காலத்தில் நாட்டில் ஏற்படக்கூடிய அரசியல், சமூக மற்றும் பொருளாதார மாற்றங்களை முன்னறிந்து அதற்கேற்ப செயற்படும் வகையில், விரிவான அரசியல் தொலைநோக்குப் பிரேரணைக்கு ஒப்புதல் அளிப்பதாகும் என அக்கட்சி தெரிவித்துள்ளது.

மேலும் இம்மாநாட்டின் ஆரம்ப நிகழ்வாக ஐ.எம்.எஃப். கோடிடல்களுக்கு மாற்று பொருளாதார வேலைத்திட்டம் என்ன என்ற தலைப்பில் அதிதி விரிவுரையை பொருளியல் பேராசிரியர் வன சமனசிறி லியனகே ஆற்றவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ரெந-16)

## சுவஸ்திகாவிற்கு சார்பாக....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஈடுபட்டனர்.

இந்நிலையில், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் சட்டத்தரணி சுவஸ்திகாவிற்கு சார்பாக வெளியிட்ட அறிக்கையைத் திரும்பப்பெறுவதாக அறிவித்துள்ளது.

அந்த அறிக்கையில், சுவஸ்திகா அருலிங்கத்தின் கருத்தான பாசிசப் புலிகள் என்ற கருத்துடன் எமது ஆசிரியர் சங்கத்துக்கு உடன்பாடு இல்லை. எமது நிர்வாகக் குழுத் தீர்மானத்துக்கு அமைவாக, சட்டத்தரணி சுவஸ்திகா அருலிங்கம் அவர்களின் உரை கடந்த 31-10-2023 அன்று நிறுத்தப்பட்டமை தொடர்பிலான யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தின் அறிக்கையை வாபஸ் பெறுகிறோம், என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (க.04)

## பாரம்பரிய கடற்றொழில்........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் தெரிவிக்கையில், கடந்த காலங்களில் கிராஞ்சி பகுதியில் கடலட்டைப் பண்ணைகளை அமைக்க அனுமதி வழங்க ஒரு சிலர் எதிர்ப்பு தெரிவித்தனர். அவர்களில் சிலர் தமது நிலைப்பாட்டை மாற்றி கடலட்டைப் பண்ணைக்கு தற்போது விண்ணப்பித்துள்ளனர்.

கடலட்டைப் பண்ணை அமைத்தவர்களுக்கு இலட்சக்கணக்கான பணம் லாபமாகக் கிடைத்துள்ளது. மேலும் பலர் கடலட்டைப் பண்ணைக்கு விண்ணப்பித்துள்ளனர். பாரம்பரியக் கடற்றொழில் செய்பவர்களுக்கு பாதிப்பு இல்லாத வகையில் அவர்களுக்கும் கடலட்டைப் பண்ணையை அமைக்க அனுமதி வழங்க அமைச்சர் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இந்திய மீனவர்கள் எமது கடற்பரப்புக்குள் வந்து தொழில் செய்வதை நாம் ஏற்றுக் கொள்ள முடியாது. இதனால் எமது வளங்கள் பாதிக்கப்படுகின்றன. எமது வளங்களை அவர்கள் அள்ளிச் செல்கின்றனர்.

எமது பகுதி மீனவர்கள் இந்தியக் கடற்பகுதிக்குள் சென்று கடற்றொழிலில் ஈடுபடுவதையும் ஏற்க முடியாது. கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் இதனையே சொல்கிறார்- என்றார். (01)

## நுவரெலியா தபால்........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தபால் ஊழியர்கள் ஆரம்பித்திருந்தார்கள்.

தபால் ஊழியர்களுக்கான அனைத்து விடுமுறைகளையும் தபால்மா அதிபர் இரத்துச் செய்த போதிலும், தபால் ஊழியர்கள் திட்டமிட்ட வகையில் தமது பணிப் பகிஷ்கரிப்பை முன்னெடுத்து வருகின்றனர்.

இந்த நிலையில், பணிப் பகிஷ்கரிப்பின் ஓர் அங்கமாக, நுவரெலியா நகரில் பாரிய போராட்டமொன்று இடம்பெற்றது.

போராட்டம் காரணமாக நுவரெலியா நகரில் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது. (க)

## நாடாளுமன்றில் விவாதம்........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூறியுள்ளார்.

ஸ்ரீலங்கா கிரிக்கெட்டின் அதிகாரிகளில் ஒருவர், வெளிநாட்டிற்குச் சென்றுள்ளதாகவும் அமைச்சர் இதன்போது சுட்டிக்காட்டியுள்ளார்.

நாடாளுமன்றத்திற்குக் காணப்படும் அதிகாரம் தொடர்பில் உயர்நீதிமன்றத்தின் கருத்தை வினவுவதற்கு ஸ்ரீலங்கா கிரிக்கெட் முயற்சித்து வருகின்றமை குறித்து ஊடகங்களின் ஊடாக அறிய முடிகின்றது, எனவும் அமைச்சர் தனது உரையில் குறிப்பிட்டுள்ளார். (க)

## குடும்ப ஆதிக்கத்தினால்தான்........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறுப்பினர்களும் சேர்ந்து எடுக்க வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

ஊழல் நிறைந்த நிர்வாக சபை, தூரநோக்கற்ற செயற்பாடு, ஒழுக்கமில்லாத நடவடிக்கைகள், நட்பு மற்றும் குடும்ப ஆதிக்கத்தினால்தான் கிரிக்கெட் விளையாட்டு இன்று மோசமான நிலைமைக்கு தள்ளப்பட்டுள்ளது என அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

தற்போது கிரிக்கெட் சபை மீதான அரசியல் அழுத்தத்தினால்தான் கிரிக்கெட் விளையாட்டு மோசமடைந்துள்ளதாக உலகத்திற்கு கூறியுள்ளார்கள். ஆனால், இந்தக் கருத்துப் பொய்யென அனைவரும் ஒன்றிணைந்து ஐ.சி.சி.க்கும், சர்வதேச கிரிக்கெட் சபைக்கும் காண்பிக்க வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொள்ளை மற்றும் ஊழல் காரணத்தினால்தான் கிரிக்கெட் வீழ்ச்சியடைந்துள்ளது என்றும் இதிலிருந்து தப்பிக்கவே அரசியல் அழுத்தம் இடம்பெற்றதாக இவர்கள் கூறுகிறார்கள் என்பதை நிரூபிக்க வேண்டும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (க)


**விற்பனையாளர் தேவை**

**நிறுவனம்:** யாழ்முற்றம்
**பால்:** இருபாலரும்
**வேலை நேரம்:** காலை 7:00 மணி - மாலை 7 மணி வரை
**சம்பளம்:** பேசித் தீர்மானிக்கப்படும்
**தொடர்புகளுக்கு:** +94 77 307 8799

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com




செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட

காலைக்கதிர் TV YouTube தளம்

# திஹாறிய தாறுஸ்ஸலாம் ஆரம்பப் பாடசாலை வாத்தியக் குழு மாணவர்களுக்கு சான்றிதழ்கள்



(ஹஸ்பர்)

திஹாறிய தாறுஸ்ஸலாம் ஆரம்பப் பாடசாலையின் வாத்தியக் குழு மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு நேற்று தாறுஸ்ஸலாம் பாடசாலையில் இடம்பெற்றது.

அண்மையில் திஹாறிய அல் அஸ்ஹர் மத்திய கல்லூரியில் 2003 சாதாரண தரம் மற்றும் 2006 உயர்தர மாணவர்களால் நடாத்தப்பட்ட ஆசியர் கௌரவிப்பு நிகழ்வில் ஆசிரியர்களைக் கௌரவிப்பதற்காக வாத்தியக் குழு கலந்து கொண்டமைக்காக குறித்த சான்றிதழ்கள் மாணவர்களுக்கு வழங்கப்பட்டன.

# இந்திய ரோட்டறிக் கழக அங்கத்தவர்கள் திருமலை விஜயம்




(ஹஸ்பர்)

இந்திய ரோட்டறிக்கழக அங்கத்தவர்கள் பின் தங்கிய பகுதியில் வசிக்கும் பாடசாலை மாணவர்களின் மத்தியில் கல்வித் தரத்தை மேம்படுத்துவதற்காக “கல்விச் சக்தி” என்னும் செயல் திட்டத்தை அறிமுகப் படுத்தும் நோக்கில் நேற்றைய தினம் திருகோணமலை ரோட்டறிக்கழக அங்கத்தவர்களைச் சந்தித்தனர்.

பெங்களூரு உல்சூர் ரோட்டறிக் கழக தலைவர் மோகன்குமார், ஆர்.பி.ஷெட்டி, ரவி, ஜி.சேகர், வி.சோமசுந்தரம் (பெங்களூரு உல்சூர் ரோட்டரி கழகம்), எஸ்.பஞ்சநாதன் (பெங்களூரு உத்யோக் ரோட்டறி கழகம்), - “கல்விச் சக்தி” செயல் திட்ட இணைப்பாளர் பி.நாகராஜன், வி.ஆர்.தனசேகரன் (சென்னை சன் சிட்டி ரோட்டறிக்கழகம்) ஆகியோரை இந்நிகழ்வில் பங்கேற்றனர்.

“கல்விச் சக்தி” திட்டத்தின் மூலம் பின் தங்கிய கிராமப் பகுதியில் கல்வி கற்கும் மாணவர்களின் கற்றல் திறனை மேம்படுத்துவதற்கு இணையம் மூலமாக சிறந்த ஆசிரியர்கள் பாடங்களைக் கற்பிப்பார்கள் எனவும், சகல நிலயங்களுக்கும் ஓர் இணைப்பாளர் கடமையாற்றுவார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

தற்சமயம் இந்தியாவில் 200 நிலையங்களும் இலங்கையில் 3 நிலையங்களும் செயல்படுவதாகவும், இதுவரை இச்செயற்பாட்டின் மூலம் சிறந்த பெறுபேறுகளை மாணவர்கள் பெற்றுள்ளார்கள் எனவும், இதன் மூலம் திருகோணமலை மாவட்ட மாணவர்கள் நிச்சயம் பயன் பெறுவார்கள் என்று எதிர்பார்ப்பதாகவும் ஒழுங்கமைப்பாளர்கள் குறிப்பிட்டனர்.

இந்நிகழ்ச்சியில் திருகோணமலை ரோட்டறிக்கழகத்தின் சார்பில் முன்னாள் தலைவர் வைத்தியர் ஞானகுணாளன் தலைமையில், செயலாளர் ரகுராம் மற்றும் கழக உறுப்பினர்கள் பங்கேற்றிருந்தனர்.

# களுவாஞ்சிகுடியில் வருடாந்த குருதிக்கொடை வழங்கல்



(வி.ரி.சகாதேவராஜா)

மண்முனை தென் எருவில்பற்று பிரதேச செயலக ஊழியர் நலன்புரிச் சங்கத்தின் ஏற்பாட்டில் வருடாந்தம் நடாத்தும் இரத்ததான நிகழ்வானது இவ்வருடமும் களுவாஞ்சிக்குடியில் நடைபெற்றது.

களுவாஞ்சிகுடி ஆதார வைத்தியசாலை மற்றும் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை இரத்த வங்கியுடன் இணைந்து ஏற்பாடு செய்த இரத்ததான நிகழ்வானது நேற்று புதன்கிழமை மு.ப 8.30 தொடக்கம் பி.ப 5 மணி வரை பிரதேச செயலாளர் திருமதி சிவப்பிரியா வில்வரத்னம் தலைமை மற்றும் வழிகாட்டுதலில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

விளையாட்டு கழகங்கள், இளைஞர் கழகங்கள் , கிராம அபிவிருத்தி சங்கங்கள், மாதர் கிராம அபிவிருத்தி சங்கங்கள், பாதுகாப்பு படையினர், பொதுமக்கள் மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் எனப் பலரும் குருதிக்கொடை வழங்கினர் .

இந்த இரத்ததான நிகழ்வானது பிரதேச செயலக நலன்புரிச் சங்கத்தினரின் ஒத்துழைப்புடன் தொடர்ச்சியாக ஆறாவது தடவையாக இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கதாகும்.



# ஹமாஸின் 130 சுரங்க நிலைகளை அழித்துள்ளதாக இஸ்ரேல் ராணுவம் டுவிட்டரில் தகவல் பகிர்ந்தது



காஸாவுக்குள் நுழைந்து தாக்குதல் நடத்தி வரும் தங்கள் வீரர்கள் இதுவரை 130 ஹமாஸ் சுரங்க நிலைகளை தாக்கி அழித்துள்ளதாக இஸ்ரேல் ராணுவம் கூறியுள்ளது.

இது குறித்து டுவிட்டர் ஊடகத்தில் இஸ்ரேல் ராணுவத்தின் தலைமைச் செய்தித் தொடர்பாளர் டானியல் ஹகாரி வெளியிட்டுள்ள பதிவில், காஸாவில் தரைவழி தாக்குதலை இஸ்ரேல் ராணுவம் தொடங்கியதிலிருந்து இதுவரை ஹமாஸ் அமைப்பினரால் உருவாக்கப்பட்டுள்ள 130 சுரங்கப் பாதை நிலைகள் அழிக்கப்பட்டுள்ளன.

அங்கு சண்டையிட்டு வரும் வீரர்களுடன் இஸ்ரேல் ராணுவத்தின் பொறியாளர்கள் குழுவும் சென்றுள்ளது. அந்தக் குழு, மற்ற வீரர்களுடன் இணைந்து காஸாவிலுள்ள ஹமாஸ் அமைப்பினரின் சுரங்க நிலைகள் மற்றும் ஆயுதங்களை அழிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளது.

அந்தக் குழுவினர் ஹமாஸ் சுரங்க நிலைகளின் இருப்பிடங்களைக் கண்டறிவது, அதனை வெடிவைத்து தகர்ப்பது ஆகிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இஸ்ரேல் ராணுவத்தின் தரைவழித் தாக்குதல் நடவடிக்கை பூமிக்கு அடியில் ஹாமஸ் அமைத்துள்ள பயங்கரவாத உள்கட்டமைப்பைத் தகர்த்து வருகிறது, என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்தப் பதிவுடன், ஹமாஸின் சுரங்கங்கள் அழிக்கப்படும் விடியோ காட்சிகளையும் டானியல் ஹகாரி இணைத்துள்ளார்.

ஹமாஸ் அமைப்பினரை முழுமையாக ஒழித்துக்கட்டுவதாக சூளுரைத்துள்ள இஸ்ரேல் ராணுவம், அதற்காக தரைவழியாக காஸாவுக்குள் படிப்படியாக தாக்குதல் நடத்தி முன்னேறி வருகிறது. எனினும், காஸாவுக்குள் நுழைந்து இஸ்ரேல் ராணுவம் நடத்தும் தாக்குதல் நடவடிக்கை மிகவும் ஆபத்தானதாக இருக்கும் என்று நிபுணர்கள் எச்சரித்து வருகின்றனர்.

அந்தப் பகுதியில் ஹமாஸ் அமைப்பினர் ரகசியமாக அமைத்துள்ள சுரங்க நிலைகள் இஸ்ரேல் ராணுவத்துக்கு மிகப் பெரிய சவாலாக இருக்கும் எனவும், அந்த நிலைகளைப் பயன்படுத்தி இஸ்ரேல் ராணுவத்துக்கு ஹமாஸ் அமைப்பு மிகப் பெரிய சேதத்தை ஏற்படுத்தும் எனவும் அஞ்சப்பட்டது.

இந்த நிலையில், காஸாவுக்குள் தாங்கள் நடத்தி வரும் தரைவழித் தாக்குதலில் 130 ஹமாஸ் சுரங்க நிலைகள் அழிக்கப்பட்டுள்ளதாக இஸ்ரேல் ராணுவம் தற்போது கூறியுள்ளது. (04)

# சிரியாவில் ஐஎஸ் அமைப்பினரின் தாக்குதலில் 21 பேர் உயிரிழப்பு



சிரியாவில் ஐஎஸ் அமைப்பினர் நடத்திய தாக்குதலில் அதிபர் அல்-அஸாத் அரசுக்கு ஆதரவான ஆயுதப் படையைச் சேர்ந்த 21 பேர் உயிரிழந்ததாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இது குறித்து அந்த நாட்டில் ஒலிபரப்பாகும் வானொலியின் நேற்றைய செய்தியில், அமெரிக்க ஆதரவு பெற்ற குர்துப் படையினரின் கட்டுப்பாட்டில் இருக்கும் ராக்கா நகருக்கும், அரசுப் படையினரின் கட்டுப்பாட்டில் இருக்கும் ஹம்ஸ் நகருக்கும் இடையிலுள்ள பாலைவனப் பகுதியில் அரசுக்கு ஆதரவாக செயல்பட்டு வரும் தேசிய பாதுகாப்புப் படையினர் மீது செவ்வாய்க்கிழமை இரவு திடீர் தாக்குதல் நடத்தப்பட்டது. இதில் 21 வீரர்கள் உயிரிழந்தனர் என்று, தெரிவிக்கப்பட்டது.

இந்தத் தாக்குதலை ஐஎஸ் பயங்கரவாதிகள் நடத்தியதாக சிரியா மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு தெரிவித்தது. எனினும், இந்தத் தாக்குதலில் 34 ஆயுதப் படையினர் கொல்லப்பட்டதாக அந்த அமைப்பு கூறியுள்ளது.

சிரியாவில் அரசுப் படையினருக்கும், அமெரிக்க ஆதரவு பெற்ற கிளர்ச்சியாளர்களுக்கும் இடையே கடந்த 2012 ஆம் ஆண்டு முதல் உள்நாட்டுப் போர் நடைபெற்று வருகிறது. இந்தப் போரின்போது உருவான ஐஎஸ் பயங்கரவாத அமைப்பு சிரியாவிலும், ஈராக்கிலும் கணிசமான பகுதிகளைக் கைப்பற்றியது.

தொடர்ந்து நடைபெற்ற உள்நாட்டுப் போரில் 4.7 லட்சம் முதல் 6.1 லட்சம் பேர் வரை உயிரிழந்ததாகக் கூறப்படுகிறது.

இந்தப் போரில் ரஷ்யாவின் உதவியுடன் அல்-அஸாதின் ராணுவம் சுமார் 64 சதவீத நிலப்பரப்பை மீட்டது. சுமார் 26 பரப்பளவு நிலம் குர்துப் படையினரின் கட்டுப்பாட்டில் உள்ளது. அமெரிக்க ஆதரவு கிளர்ச்சியாளர்கள் வசமும், துருக்கி வசமும் சுமார் 10 சதவீத நிலப்பரப்பு உள்ளது. ஐஎஸ் அமைப்பிடம் குறிப்பிடத்தக்க ஆட்சிப் பகுதி இல்லை.

இருந்தாலும், அந்த அமைப்பினர் ரகசியமாகப் பதுங்கியிருந்து அவ்வப்போது பயங்கரவாதத் தாக்குதல்களில் ஈடுபட்டு வருகின்றனர். (04)

# காஸாவிலிருந்து நேற்றும் மக்கள் வெளியேற்றம்



காஸாவில் இஸ்ரேல் ராணுவம் தாக்குதலை தீவிரப்படுத்தியுள்ள நிலையில், அந்தப் பகுதியில் வடக்கிலிருந்து தெற்குப் பகுதிக்கு மேலும் ஆயிரக் கணக்கானவர்கள் நேற்று வெளியேறினர்.

இது குறித்து ஐக்கியநாடுகளின் அகதிகளுக்கான நல அமைப்பு தகவல் வெளியிட்டுள்ளது.

ஹமாஸ் அமைப்பினரின் கோட்டையாகத் திகழும் காஸா நகருக்குள் முழு வீச்சில் தாக்குதல் நடத்துவதற்கு முன்னதாக, அங்கு வசிக்கும் பொதுமக்கள் தெற்கு காஸாவுக்கு வெளியேற இஸ்ரேல் ராணுவம் உத்தரவிட்டது. அதற்காக, குறிப்பிட்ட நேரத்துக்கு தாக்குதல் நிறுத்தம் மேற்கொள்வதாகவும் ராணுவம் கூறியது.

அதையடுத்து, நடைபயணமாகவும், கழுதை



வண்டிகளிலும் அந்த நகரிலிருந்து ஏராளமானவர்கள் தெற்குப் பகுதியை நோக்கி செவ்வாய்க்கிழமை வெளியேறினர்.

இந்த நிலையில், வெளியேற்றத்துக்கான கால அவகாசத்தை இஸ்ரேல் ராணுவம் மேலும் நீடித்ததால் புதன்கிழமையும் ஆயிரக்கணக்கான பொதுமக்கள் வடக்கு காஸாவிலிருந்து தெற்கு காஸாவுக்கு வெளியேறினர்.

வடக்குப் பகுதியில் உணவுப்பொருள் வேகமாகத் தீர்ந்து வரும் சூழலில், அவர்கள் தெற்கு நோக்கி பயணித்தனர் என்று அந்த அமைப்பு கூறியது. இருந்தாலும், காஸா சிட்டி உள்பட வடக்கு காஸா பகுதியில் இன்னும் சுமார் 9 லட்சம் பேர் இருப்பதாக காஸா உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது. (04)

# இந்தோனேசியாவில் அடுத்தடுத்து சக்தி வாய்ந்த நிலநடுக்கங்கள்




இந்தோனேசியாவில் அடுத்தடுத்து சக்திவாய்ந்த நிலநடுக்கங்கள் நேற்று ஏற்பட்டுள்ளன. இது குறித்து அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தகவல் தெரிவித்துள்ளது.

இந்தோனேசியாவின் மலுக்கு மாகாணத்திலுள்ள கடலோர நகரான துவாலுக்கு 341 கி.மீ. தென்மேற்கே புதன்கிழமை நிலநடுக்கம் ஏற்பட்டது. ரிக்டர் அளவுகோலில் இந்த நிலநடுக்கம் 6.9 அலகுகளாகப் பதிவானது.

இந்த நிலநடுக்கத்தைத் தொடர்ந்து மேலும் ஒரு சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. அது ரிக்டர் அளவுகோலில் 7.0 அலகுகளாகப் பதிவானது.

அதன் தொடர்ச்சியாக, 5.1 ரிக்டர் அளவு கொண்ட 2 பின்னதிர்வுகள் ஏற்பட்டன என்று அந்த மையம் தெரிவித்துள்ளது.

இந்த நிலநடுக்கங்களின் அதிர்வுகள் அருகிலுள்ள தீவுகளில் நன்கு உணரப்பட்டாலும், அந்தப் பகுதிகளில் உயிர்ச் சேதமோ, வேறு சேதங்களோ ஏற்பட்டதாக உடனடித் தகவல் எதுவும் கிடைக்கவில்லை.

மேலும், இந்த நிலநடுக்கம் காரணமாக சுனாமி ஏற்படுவதற்கான அபாயமும் இல்லை, என்று இந்தோனேசிய வானியல் மற்றும் புவியியல் ஆய்வு மையம் தெரிவித்தது.

2.7 கோடி மக்கள் தொகையைக் கொண்ட இந்தோனேசியாவில் அடிக்கடி நிலநடுக்கம், எரிமலை வெடிப்பு, சுனாமி போன்ற இயற்கைச் சீற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன. இந்தோனேசியாவின் அருகே இந்தியப் பெருங்கடலில் 2004 ஆம் ஆண்டு ஏற்பட்ட சக்திவாய்ந்த நிலநடுக்கத்தால் சுனாமி ஏற்பட்டு, இலங்கை, இந்தியா உள்ளிட்ட பல்வேறு நாடுகளைச் சேர்ந்த 2.3 லட்சம் பேர் உயிரிழந்தது நினைவுகூரத்தக்கது. (04)

# கல்முனை நூலகத்தில் மாணவர்களுக்கு வாசிப்பு மாத சிறப்புத் திட்டம் ஆரம்பம்



(ஏ.எஸ்.மௌலானா)

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு பாடசாலை மாணவர்கள் மத்தியில் வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்கும் விசேட செயற்றிட்டம் கல்முனை பொது நூலகத்தில் இன்று வியாழக்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

நூலகர் ஏ.எல்.எம். முஸ்தாக் தலைமையில் இடம்பெற்ற ஆரம்ப நிகழ்வில் மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம்.அஸ்மி பிரதம அதிதியாகவும் உதவி ஆணையாளர் ஏ.எஸ்.எம். அஸீம் கௌரவ அதிதியாகவும் பங்கேற்றிருந்ததுடன் ஓய்வுபெற்ற உதவிக் கல்விப் பணிப்பாளர் பி.சிவப்பிரகாசம் வாசிப்பின் முக்கியத்துவம் பற்றி சிறப்புரையாற்றினார்.

இந்நிகழ்வில் கல்முனை வெஸ்லி உயர்தர பாடசாலை, ஆர்.கே.எம். வித்தியாலயம், இஸ்லாமாபாத் முஸ்லிம் மகா வித்தியாலயம், நற்பிட்டிமுனை அல்-அக்ஸா மகா வித்தியாலயம் ஆகிய 4 பாடசாலைகளின் ஆரம்பப் பிரிவு மாணவர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது இம்மாணவர்கள் கல்முனை பொது நூலகத்தின் அனைத்துப் பிரிவுகளையும் பார்வையிட்டு, அவற்றின் பயன்பாடுகளையும் முக்கியத்துவத்தையும் நேரடியாக கண்டறிந்து கொண்டதுடன் நூலகர் மற்றும் உதவி நூலகர்களினால் இவர்களுக்கு விளக்கங்களும் அளிக்கப்பட்டன.



இச்சிறப்பு நிகழ்வில் குறித்த பாடசாலைகளின் பொறுப்பாசிரியர்களுடன் சமூக மற்றும் நூலக செயற்பாட்டாளர் எஸ்.எம். அபூபக்கர் உள்ளிட்டோரும் பங்கேற்றிருந்தனர்.

# சூனியமென மிரட்டி யாழில் பணமோசடி பொலிஸார் விடுத்துள்ள எச்சரிக்கை

யாழ்ப்பாணத்தில் செல்வந்தர்களை இலக்கு வைத்து நபரொருவர் பணமோசடியில் ஈடுபட்டு வருவதாகப் பொலிஸார் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

நபரொருவர் யாழ்ப்பாணத்தில் உள்ள செல்வந்தர்களை தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு உங்களுக்கு செய்வினை வைக்கப்பட்டுள்ளது. உங்கள் வளர்ச்சியில் பொறாமை கொண்டவர்கள் உங்களுக்கு செய்வினை செய்து சூனியம் வைத்துள்ளார்கள். அந்த செய்வினையை உடனே அகற்ற வேண்டும், எனத் தெரிவித்து அவர்களை அச்சமடையச் செய்வதாக அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இதனை தனது ஞான திருஷ்டியால் அறிந்து கொண்டதாகவும், தான் ஒரு மாந்திரீகவாதி எனவும், தன்னால் மட்டுமே அதனை அகற்ற முடியும்எனவும்கூறி, அவர்களுக்கு நம்பிக்கையை வரவைத்து அந்த நபர் பணமோசடியில் ஈடுபட்டு வருவதாகக் கூறப்படுகின்றது.

இந்நிலையில் குறித்த நபருக்கு எதிராக முறைப்பாடுசெய்வதற்கு அவரின்பெயர்விபரங்கள் தெரியாததாலும், பாதிக்கப்பட்டவர்கள் தமது அந்தஸ்துக் கருதி முறைப்பாடு செய்ய முன் வராததாலும் அந்த நபரின் ஏமாற்று வேலைகள் தொடர்ந்து கொண்டே செல்வதாகவும், எனவே இது தொடர்பில் மக்கள் விழிப்பாக இருக்க வேண்டும் எனவும் பொலிஸார் எச்சரிக்கை விடுத்துள்ளனர். (க)




# கடந்த 10 மாதங்களுக்குள் 69,479 டெங்கு நோயாளர்கள்



இவ்வருடத்தின் கடந்த 10 மாதங்கள் மற்றும் 5 நாட்களில் 69,479 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவின் பணிப்பாளர் விசேட வைத்தியர் கலாநிதி நளீன் ஆரியரத்ன தெரிவித்துள்ளார்.

இதன்போது 39 டெங்கு மரணங்கள் பதிவாகியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மேலும், டெங்கு காய்ச்சலால் பாதிக்கப்பட்டவர்களில் 25 சதவீதம் பேர் பாடசாலை மாணவர்களாக இருப்பதால்




பாடசாலை வளாகம் மற்றும் வகுப்பறைகளை முறையாக சுத்தம் செய்ய வேண்டும் என பாடசாலை நிர்வாகங்களை அவர் கேட்டுக் கொண்டுள்ளார். (ரெந-14)

# பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் அறிக்கை வழங்குதலை நிறுத்தம்

பொது சுகாதார பரிசோதகர்களின் எரிபொருள் மற்றும் மோட்டார் சைக்கிள் பராமரிப்பு செலவு அதிகரிப்புக்கு ஏற்ப உதவித்தொகையை அதிகரிக்காமைக்கு உட்பட பல விடயங்களுக்கு அரசாங்கத்திடமிருந்து சாதகமான பதில்கள் கிடைக்காத காரணத்தினால் நேற்று முதல் பொது சுகாதார பரிசோதகர்கள் சகல சுகாதார அறிக்கைகளையும் வழங்குவதை இடைநிறுத்தியுள்ளதாக இலங்கை பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹன தெரிவித்தார்.

இதுதவிர, எதிர்வரும் 15 ஆம் திகதி முதல் டெங்கு தடுப்புப் பணிகளில் இருந்தும் விலகுவதாகவும், தற்போதைய சூழ்நிலையில் முன்னேற்ற மதிப்புரைகள் உள்ளிட்ட அனைத்துக் கூட்டங்களிலும் பங்கேற்பது நிறுத்தப்பட்டுள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ரெந-15)

# வெள்ளை வானில் கடத்திக் கொலை செய்வோம்! மக்களை அச்சுறுத்தி காணி அபகரிப்பு முயற்சி



மன்னாரில்காணிகளை விற்பனை செய்ய மறுப்பவர்கள் மீது கொலை அச்சுறுத்தல் விடுக்கப்ப டுவதாக அப்பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

அவுஸ்திரேலியாவை சேர்ந்த நிறுவனம் ஒன்று மன்னார் மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் 4000 துளைகளுக்கு மேல் இட்டு கனிய மணல் ஆய்வுகளை மேற்கொண்டு, தற்போது மணல் அகழ்வுக்கான அனுமதியை அரசிடம் கோரியுள்ளது.

இந் நிலையில், நேற்றைய தினம் இது தொடர்பில் ஆய்வுகளை மேற்கொள்வதற்காக இலங்கையில் சுமார் 18 திணைக்களங்களை சேர்ந்த அதிகாரிகள் மன்னார் பிரதேச செயலா ளர் பிரிவில் உள்ள கொண் ணையன் குடியிருப்பு பகுதிக்குச் சென்றிருந்தனர்.

இந்நிலையில் குறித்த விடயத்தை அறிந்த அப்பகுதி மக்கள் ஒன்று திரண்டு ஆய்வுகளுக்கு அனுமதி வழங்க மறுத்ததுடன் வீதித் தடைகளையும் ஏற்படுத்தி, "மணல் அகழ்வுக்கு அனுமதி வழங்க முடியாது!" என்று கோஷம் எழுப்பியிருந்தனர்.

மக்களின் தொடர் எதிர்ப் பின் காரணமாக குறித்த குழுவினர் சம்பவ இடத்தைவிட்டு வெளியேறியதுடன் மன்னார் மாவட்ட செயலகத்தில் விடயம் தொடர்பில் கலந்துரையாடல் ஒன்றையும் மேற்கொண்டிருந்தனர்.

இதேவேளை, வன்னியைச் சேர்ந்த முன்னாள் அமைச்சரும்தற்போதைய நாடாளுமன்ற உறுப்பினருமான ஒருவர் குறித்த மணல் அகழ்வு மேற்கொள்ளவுள்ள நிறுவனத்தின் இலங்கைக்கான பிரதிநிதியிடம் பாரிய அளவு லஞ்சம் கோரியதாகவும், அதே நேரம் குறித்த அமைச்சரின் உறவினரான நபர் ஒருவர் மக்களின் காணிகளை அடாத்தாகப் பிடித்து குறித்த நிறுவனத்திற்கு விற்பனை செய்துள்ளதாகவும் மக்கள் ஊடகங்களுக்குத் தெரிவித்திருந்தனர்.

அத்துடன் காணி விற்பனை செய்ய மறுப்பவர்களை வெள்ளை வானில் கடத்துவோம், கொலை செய்வோம் - என அச்சுறுத்தி காணிக் கொள்ளையில் ஈடுபட்டு வருவதாகவும், இவ்விடயம் தொடர்பாக மன்னார் மாவட்டத்தில் உள்ள தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தொடர்ந்தும் மௌனம் காத்து வருவதாகவும் மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

மக்களின் எதிர்ப்பையடுத்து, அகழ்வுக்கான அனுமதி தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளதோடு, முன்னாள் அமைச்சரின் பின்புலத்தில் தற்போது மணல் அகழ்வுக்கான உயர்மட்ட அனுமதிகளைப் பெறுவதற்கான செயல்பாடுகள் இடம்பெறுவதாகத் தகவல்கள் வெளிவந்துள்ளன. (க)

# நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்ட நேபாளத்துக்கு அவசர உதவிப் பொருட்களை அனுப்பிய இந்தியா



நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்டுள்ள நேபாள மக்களுக்கு 21 தொன் நிவாரணப் பொருட்களை இந்தியா அனுப்பி உள்ளது.

நேபாளத்தின் ஜாஜர்கோட் பகுதியில் கடந்த 3 ஆம் திகதி ஏற்பட்டநிலநடுக்கம் ரிச்டர் அலகில் 6.4 புள்ளிகள் ஆக பதிவானது. இதில் 157 பேர் உயிரிழந்தனர். பலர் காயம் அடைந்தனர். இந்நிலையில், நேபாளத்துக்கு முதல் நாடாக இந்தியா நிவாரணப் பொருட்களை அனுப்பியுள்ளது.

முதற் கட்டமாக கடந்த ஞாயிறன்று இந்திய விமானப படையின் சி-130ஜே ரக சரக்கு விமானத்தில் இந்திய நாணய மதிப்பில் 10 கோடி பெறுமானமுள்ள கூடாரச் சீட்கள், போர்வைகள், மருந்துகள், மருத்துவ சாதனங்கள், எளிதில் தூக்கிச் செல்லும் வென்டிலேட்டர்கள் என 11 தொன்னுக்கும் மேற்பட்ட நிவாரணப் பொருட்கள் நேபாள்கஞ்ச் நகருக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

இந்நிலையில், நேற்று முன்தினமும் இந்திய விமானப் படையின் மற்றொரு சி-130ஜே விமானத்தில் 9 தொன்னுக்கும் மேற்பட்ட நிவாரணப் பொருட்கள் நோபாள்கஞ்ச் நகருக்கு அனுப்பி வைக்கப்பட்டன. இதுவரை மொத்தம் 21 தொன் நிவாரணப் பொருட்களை நேபாளத்துக்கு இந்தியா அனுப்பியுள்ளது. 'ஒப்பரேஷன் மைத்ரி' என்ற பெயரில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இதுகுறித்து டுவிட்டர் தளத்தில் பதிவிட்டுள்ள இந்திய வெளியுறவுத துறை அமைச்சர் ஜெய்சங்கர், "அண்டை நாடுகளுக்கு முதலில் உதவ வேண்டும் என்ற கொள்கையை பிரதமர் மோடி வலியுறுத்தி வருகிறார். அதன்படி நெருக்கடி நேரத்தில், அண்டை நாடுகளுக்கு உதவுவதில் இந்தியா உறுதியுடன் உள்ளது" என குறிப்பிட்டுள்ளார். (04)




# மாற்றுப் பாலினத்தவரும் ஞானஸ்நானம் பெற வத்திக்கான் கோட்பாட்டு அலுவலகம் ஒப்புதல்



மாற்றுப் பாலினத்தவரும் கத்தோலிக்க ஞானஸ்நானம் பெறுவதற்கு வத்திக்கானின் கோட்பாட்டு அலுவலகம் ஒப்புதல் அளித்துள்ளது. அவர்களே ஞானப் பெற்றோராக இருந்து தமக்குத்தாமே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளவும் வழிவகுக்கப்பட்டுள்ளது. மேலும் அவர்கள் கத்தோலிக்கத் திருமணங்களில் சாட்சிகளாக இருக்கவும் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

பிரேசில் நாட்டைச் சேர்ந்த ஜோசப் நெக்ரி என்ற பாதிரியார் ஒருவர் கடந்த ஜூலை மாதம் 6 கேள்விகள் அடங்கிய ஒரு தொகுப்பை வத்திக்கானுக்கு அனுப்பியிருந்தார். அதில் தன்பாலின ஈர்ப்பாளர்கள் குறித்தும், அவர்களுக்கு ஞானஸ்நானம்வழங்குதல் குறித்தும் கேட்கப்பட்டிருந்தது.

இந்தக் கேள்விகளுக்கு கடந்த ஒக்டோபர் மாதம் வத்திக்கானின் நம்பிக்கைக்கான கோட்பாட்டுத் துறை பதிலளித்தது. போப்பிரான்சிஸ்ஒப்புதலுடன் கூடிய மூன்று பக்கக் கடிதத்தை பிஷப் ஜோசப் நெக்ரிக்கு அனுப்பி வைத்தது.

அதில் மாற்று பாலினத்தவர் மற்றும் தன்பாலின ஈர்ப்பாளர்கள் ஆகியோர் திருச்சபைகளில் ஞானஸ்நானம்பெறலாம் என்று ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. ஆனால், நம்பிக்கையில் எந்தவித மாற்றங்களோ அல்லது குழப்பங்களோ இருக்கக்கூடாது என்ற நிபந்தனையையும் வத்திக்கான் முன்வைத்துள்ளது.

அதே போல, உள்ளூர்ப் பாதிரியாரின் விருப்பத்துக் கேற்ப, மாற்றுப் பாலினத்தவர் மற்றும் தன்பாலின ஈர்ப்பாளர்கள் கிறிஸ்தவ திருமணங்களில் சாட்சியாக இருக்கலாம். அதற்கு உள்ளூர்ப் பாதிரியாரின் ஒப்புதல் அவசியம் என்றும் அந்தக் கடிதத்தில் கூறப்பட்டுள்ளது. எனினும், ஞானஸ்நானத்தில் தன்பாலின ஈர்ப்பாளர்களின் பங்கு என்ன என்பது குறித்த தெளிவான விளக்கங்கள் எதுவும் கூறப்படவில்லை. (04)

# வெளிநாடுகளுக்கான உயர்ஸ்தானிகர்கள், தூதுவர்கள் வடமாகாண ஆளுநரைச் சந்தித்துக் கலந்துரையாடினர்



வெளிவிவகார அமைச்சினால் புதிதாக நியமிக்கப்பட்ட பல வெளிநாடுகளுக்கான உயர்ஸ்தானிகர்கள் மற்றும் தூதுவர்கள் வடமாகாணத்திற்கு கண்காணிப்பு விஜயம் மேற்கொண்டிருந்த போது வடமாகாண ஆளுநர் செயலகத்தில் வடமாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸை சந்தித்து கலந்துரையாடினர்.

தற்போதைய அரசாங்கத்தின்கீழ் வடமாகாண மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும், வடமாகாணத்தை அபிவிருத்தி செய்யவும் பல நீண்ட கால மற்றும் குறுகிய கால வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதாகவும் அவற்றுள் வடமாகாணத்தில் 25,000 நிரந்தர வீடுகளை நிர்மாணித்தல் மற்றும் சூரிய சக்தி மூலம் மின்சாரம் தயாரிக்கும் திட்டங்களின் முன்னாயத்த வேலைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதகவும் வடமாகாண ஆளுநர் தெரிவித்திருந்தார்.

மேலும் புதிதாக நியமிக்கப்பட்டுள்ள தூதுவர்கள் மற்றும் உயர்ஸ்தானிகர்களுக்கு வடமாகாணத்தின் தற்போதைய நிலைமைகள், மக்களின் அன்றாட நடவடிக்கைகள், அபிவிருத்தி திட்டங்கள் குறித்து ஆளுநர் விளக்கமளித்தார்.

வடமாகாண மக்களின் வாழ்வை கட்டியெழுப்பும் அபிவிருத்தித் திட்டங்களுக்கு புதிதாக நியமிக்கப்பட்டுள்ள தூதுவர்கள் மற்றும் புதிய ஆணையாளர்களின் ஆதரவைப்பெறும்நோக்குடன் இக்கலந்துரையாடல் இடம்பெற்றது.

ஆளுநரின் தலைமையில் மாகாண மக்களுக்கு ஆற்றிவரும் சேவையைப் பாராட்டுவதாகவும், எதிர் காலத்தில் வடக்கின் அபிவிருத்திக்காக தாம் கடமை புரியும் நாடுகளின் ஆதரவை பெற்றுக்கொள்ள நடவடிக்கைகளை மேற்கொள்வோம் எனவும் புதிய தூதர்கள் தெரிவித்தனர்.

மேலும், இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையில் நேரடி பயணிகள் படகு சேவைகள் அண்மையில் ஆரம்பிக்கப்பட்டமை, எதிர்காலத்தில் மன்னாருக்கும் இந்தியாவிற்கும் இடையிலான படகு சேவைத்திட்டங்கள், மீன்பிடி, விவசாயம், நீர்ப்பாசனம், கிராமிய பொருளாதார நடவடிக்கைகள் போன்றவை பற்றியும், வடமாகாணத்தின் வளங்களைப் பயன்படுத்தி எதிர்காலத்தில் செய்யக்கூடிய சாதகமான ஆக்கபூர்வமான திட்டங்கள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

தற்போதைய ஆளுநரின் நியமனத்தின் பின்னர், வடமாகாணத்தின் அபிவிருத்தி மற்றும் மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளுக்கு மீண்டும் பாராட்டு தெரிவித்த புதிய தூதுவர்கள் மற்றும் உயர்ஸ்தானிகர்கள், வடமாகாண அபிவிருத்திக்கு அந்தந்த நாடுகளிடமிருந்து அதிகபட்ச ஆதரவை வழங்குவதாக உறுதியளித்தனர். (01)

# இலங்கையில் அரிய வகை கல்வெட்டு பொலன்னறுவையில் கிடைத்தது



இலங்கையில் இதுவரை கண்டறியப்பட்டாத மிகவும் அரிதான மற்றும் மிகப்பெரிய கல்வெட்டு, வரலாற்றுச் சிறப்புமிக்க பொலன்னறுவை திம்புலாகல ஆரண்ய சேனாசன மலைப்பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக பொலன்னறுவை தொல்பொருள் அலுவலகம் தெரிவித்துள்ளது.

தொல்பொருள் திணைக்களத்தின் தலைமையகத்தின் கல்வெட்டுப் பிரிவு அதிகாரிகள் மற்றும் பொலன்னறுவை தொல்பொருள் ஆய்வுக் குழுவினரால் இந்த அரிய கல்வெட்டு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கல்வெட்டை நகலெடுக்க ஒரு மாதத்திற்கு மேல் ஆகும் என தொல்லியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

தொல்பொருள் திணைக்களத்தின் உரிய அதிகாரிகள் மற்றும் பணியாளர்கள் அடங்கிய குழுவினர் திம்புலாகலை மலைத்தொடரில் தங்கியிருந்து கடந்த 26 ஆம் திகதி முதல் கல்வெட்டைப் பிரதி எடுக்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்தக் கல்வெட்டு சுமார் 45 அடி நீளமும் 18 அடி அகலமும் கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City
எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!
இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!
உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்
முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்









4th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd
தொடர்புகளுக்கு: 0777 43 5557


JRIDE
BEYOND THE ROAD
ஜே ரைட்
ஒன்லைன் ரக்சி அப்
ONLINE TAXI APP FROM JAFFNA
ஆட்டோ கட்டணங்களால் ஆடிப்போயுள்ளீர்களா?
கவலையினை விடுங்கள்.
நாங்கள் தயாராகிவிட்டோம்!
யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)
உங்கள் பயணங்களை பாதுகாப்பானதாகவும் மகிழ்ச்சிகரமானதாகவும் செலவு குறைவாகவும் அமைத்துக்கொள்ளுங்கள்.
இப்போதே Play Store இல் இருந்து JRide - Beyond The Road App இனை இறக்கி உங்கள் தொலைபேசி இலக்கத்தை பயன்படுத்தி உங்கள் கணக்கை பதிவு செய்யலாம்!
YOU CAN EASILY REGISTER & BOOK YOUR RIDE
+94 21 222 8358
JRIDE TAXI SERVICE
SPEED IT NET
பரமேஸ்வரா சந்தி,
136, பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
+94 703 563213
www.jride.lk




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.68, குறசெட் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 09.11.2023இல் வெளியிடப்பெற்றது.